தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,
ஐயா,

தேதி: 10.11.2026

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் "மூலக்கூறு மாதிரியாக்கம், பொருந்துதல் மற்றும் உருவகப்படுத்துதல்" குறித்த நடைமுறைப் பயிற்சி

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் (TNAU), கோயம்புத்தூரில் உள்ள தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிர்தகவலியல் துறை, தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிரித் தொழில்நுட்ப மையம் (CPMB&B) சார்பில் "மூலக்கூறு மாதிரியாக்கம், பொருந்துதல் மற்றும் உருவகப்படுத்துதல்" குறித்த மூன்று நாள் நடைமுறை பயிற்சி வகுப்பு நவம்பர் 10 முதல் 12 ஆம் தேதி 2026 வரை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இப்பயிற்சியில் புவனேஸ்வரில் உள்ள வேளாண் அறிவியல் நிறுவனம், பாகல்கோட்டில் உள்ள தோட்டக்கலை அறிவியல் பல்கலைக்கழகம், சென்னை எஸ்.ஆர்.எம். அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனம், திருச்சிராப்பள்ளி தனலட்சுமி சீனிவாசன் பல்கலைக்கழகம், சென்னை ஹிந்துஸ்தான் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர் பி.எஸ்.ஜி. கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பாரதியார் பல்கலைக்கழகம், மற்றும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் ஆகிய பல்வேறு கல்வி நிறுவனங்களைச் சேர்ந்த பேராசிரியர்கள், முதுநிலை மற்றும் முனைவர் பட்ட ஆராய்ச்சி மாணவர்கள் ஆர்வத்துடன் பங்கேற்றனர்.

தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிர்தகவலியல் துறை பேராசிரியர் மற்றும் தலைவர், முனைவர் எல். அருள் வரவேற்புரையாற்றி, இத்தகைய பயிற்சிப் பட்டறைகள் ஆராய்ச்சித் திறன்களை மேம்படுத்துவதிலும், அறிவியல் அறிவை வளர்ப்பதிலும் முக்கியப் பங்கு வகிப்பதை எடுத்துரைத்தார். தொடர்ந்து, பங்கேற்பாளர்கள் தங்களை அறிமுகப்படுத்திக் கொண்டனர்.

தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிரித் தொழில்நுட்ப மையத்தின் இயக்குநர் முனைவர் ந. செந்தில் அவர்கள் பயிற்சித் திட்டத்தின் நோக்கங்கள் குறித்து விளக்கினார். மேலும், தற்போதைய ஆராய்ச்சிகளில் மூலக்கூறு மாதிரியாக்கம் மற்றும் மூலக்கூறு பொருந்துதல் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார். செயற்கை நுண்ணறிவின் (Artificial Intelligence – AI) பல்வேறு பயன்பாடுகள் மற்றும் அறிவியல் ஆராய்ச்சியில் அதன் வளர்ந்து வரும் பங்களிப்பு குறித்தும் விரிவாக விளக்கினார்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் தோட்டக்கலைக் கல்லூரி முதல்வர் முனைவர் க.வெங்கடேசன் அவர்கள் சிறப்புரையாற்றினார். தோட்டக்கலைப் பயிர்களின் முக்கியத்துவம் மற்றும் வேளாண்மையில் அவற்றின் பங்களிப்பு குறித்து எடுத்துரைத்தார்.

இறுதியாக, தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிரித் தகவலியல் துறையின் இணைப் பேராசிரியர் முனைவர் நா. பாரதி அவர்கள் நன்றியுரை வழங்கினார். இதனுடன் தொடக்க விழா இனிதே நிறைவுற்றது.

மக்கள் தொடர்பு அலுவலர்